முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2015 யூலை

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

25-07-2015
முற்பகல்
[9.00 – 11.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

பக்கங்கள் : 12
வினாக்கள் : 07

(1) ***நேரம் :*** *02 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உமக்குத் தரப்பட்டுள்ள* ***விடைத்தாளில்*** *விடையளித்தல் வேண்டும்.*

(4) *சகல எழுத்து வேலைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்க. ஏதாவது எடுகோள்கள் எடுக்கப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *நிறப்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயற்பாட்டு வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயற்பாட்டு வினைச் சொல்லைக் (OTQ's தவிர்ந்த) கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயற்பாட்டு வினைச்சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினெட்டு (18) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*வினாக்கள்* ***1.1*** *தொடக்கம்* ***1.9*** *வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடை தேர்வு செய்யப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை உங்கள் விடைப்புத்தகத்தில் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிராக எழுதவும்.*

**1.1** கணக்கீட்டின் முக்கிய வகிபாகமானது :

(1) கணக்கேடுகளில் ஒரு உரிமத்தின் ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்கு

(2) ஒரு உரிமத்தின் ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளை அளவிட்டு, பதிவுசெய்து தொகுப்பதற்கு

(3) உரிமத்தின் மீதான அக்கறை கொண்டோர்க்குத் தீர்மானம் எடுப்பதற்கு நிதிசார் தகவல்களை வழங்குவதற்காக

(4) முகாமையாளர்கள் தங்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு பயன்படும் பொருட்டு உரிமத்தின் தகவல்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும்

(02 புள்ளிகள்)

**1.2**

- **(a)** தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் வகை
- **(b)** அறிக்கையிடும் கால இடைவெளி (மீடிறன்)
- **(c)** அறிக்கையின் படிவமைப்பு
- **(d)** அறிக்கைகளைப் பயன்படுத்துவபர்கள்

நிதிக் கணக்கீட்டிலிருந்து முகாமைக் கணக்கீட்டினை வேறுபடுத்த மேற்கொள்ளப்பட்ட பண்புகளில் எது பயன்படுத்தப்படலாம்?

(1) **(a)** மற்றும் **(b)** மட்டும். (2) **(b)** மற்றும் **(c)** மட்டும்.

(3) **(a), (b)** மற்றும் **(c)** மட்டும். (4) மேற்கூறப்பட்ட யாவும்.

(02 புள்ளிகள்)

**1.3** **(வரை) AD நிறுவனம்** கொள்முதற் சிட்டை PO-89 இன்படி **(வரை) BC நிறுவனத்திடம்** இருந்து பெற்ற பொருட்களில் சில குறைபாடுகளை அவதானித்து அவற்றை **(வரை) BC நிறுவனத்திற்கு** திருப்பி அனுப்பத் தீர்மானித்தது. இதன் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய மூல ஆவணமானது,

(1) செலவுப் பதிவுக் குறிப்பு (2) வரவுப் பதிவுக் குறிப்பு

(3) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (4) பொருட்கள் கோரிக்கைக் குறிப்பு

(02 புள்ளிகள்)

**1.4** **லசந்தவின்** வியாபாரத்தின் நிகரச் சொத்துக்கள் 2015 மார்ச் 31 மற்றும் 2014 மார்ச் 31 இல் முறையே ரூ. 1,350,000/- மற்றும் ரூ. 1,000,000/- ஆகும். வருடத்தில் **லசந்த** மேலதிக மூலதனமாக ரூ. 500,000/- ஐ முதலீடு செய்தார். மேலும் வியாபாரத்திலிருந்து ரூ. 600,000/- ஐ எடுப்பாக (drawing) பெற்றார். இதன் பிரகாரம் 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்தில் **லசந்தவினால்** உழைக்கப்பட்ட இலாபம் :

(1) ரூ. 250,000/-. (2) ரூ. 350,000/-.

(3) ரூ. 450,000/-. (4) ரூ. 950,000/-. (02 புள்ளிகள்)

**1.5** நிதி அறிக்கையிடலுக்கான கோட்பாட்டுச் சட்டகத்தினால் (Conceptual Framework) அடையாளம் காணப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மூலகங்கள் ஆவன :

(1) முற்றடக்க வருமானக் கூற்று, நிதிநிலைக் கூற்று, காசுப் பாய்வுக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

(2) சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானம், செலவுகள்.

(3) உற்பத்திக் கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு, நிதிநிலைக் கூற்று மற்றும் உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று.

(4) நடைமுறை சாராத சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறை சாராத பரிப்புக்கள், நடைமுறைப் பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மை.

(02 புள்ளிகள்)

**1.6** ஒரு கணக்கீட்டு முறைமையில் மூலப்பதிவேடாகவும் பேரேட்டுக் கணக்காகவும் பின்வருவன வற்றுள் எது திகழ்கிறது?

(1) விற்பனை நாளேடு (2) பொது நாட்குறிப்பேடு

(3) காசேடு (4) விற்பனைத் திரும்பல் நாளேடு

(02 புள்ளிகள்)

**1.7** நிதிநிலைக் கூற்று தயாரிக்கப்படுவது,

(1) ஒரு குறிப்பிட்ட நாளில் உரிமம் ஒன்றின் நிதிநிலையைப் பிரதிபலிப்பதற்கு

(2) ஒரு குறிப்பிட்ட காலத்தில் உரிமம் ஒன்றின் நிதிச் செயற்பாட்டின் நிலையைப் பிரதிபலிப்பதற்கு

(3) எதிர்காலமொன்றிற்கு எதிர்வுகூறப்பட்ட நிதிநிலையைப் பிரதிபலிப்பதற்கு

(4) ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் சொத்துக்களின், பரிப்புக்களின் உரிமையாண்மையின் ஏற்ற இறக்கத்தைப் (அசைவை) பிரதிபலிப்பதற்கு (02 புள்ளிகள்)

**1.8** கடன் அடிப்படையிலான ரூ. 10,000/- கொள்முதல் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்தத் தவறைச் சீர்செய்வதால்,

(1) மொத்த இலாபம் அதிகரிக்கும் (2) மொத்த இலாபம் குறைவடையும்

(3) மொத்த இலாபத்தில் தாக்கம் ஏதுமில்லை (4) மேற்கூறிய ஏதுமல்ல

(02 புள்ளிகள்)

**1.9** தகவல் தொழில்நுட்பத்தின் தாக்க விளைவு வியாபார நிறுவனங்கள் கணக்கீட்டுத் தேவைகளை ஈடுசெய்ய கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறையினைப் பிரயோகிக்க இட்டுச் சென்றது. அதன் பயனை உள்ளடக்குவது பின்வருவனவற்றுள் எது?

(1) அதிகரிக்கப்பட்ட செம்மை (accuracy) (2) நாளது வரையிலான அறிக்கைகள்

(3) அதிகரித்த வேகம் (4) மேற்கூறிய எல்லாம்

(02 புள்ளிகள்)

*வினாக்கள் **1.10** மற்றும் **1.11** இல் தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மையானதா, தவறானதா எனக் குறிப்பிட்டு தேர்வு செய்த விடையை (உண்மை / தவறு) உங்கள் விடைப்புத்த கத்தில் வினாவிற்கு ஒதுக்கப்பட்ட இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுக.*

**1.10** நம்பகரமாக அளவிடக்கூடிய ஒரு சொத்தின் அதிகரிப்பு அல்லது ஒரு பரிப்பின் குறைவுக்கு தொடர்புடையதாக எதிர்கால பொருளியல் சார்ந்த பயனின் அதிகரிப்பு ஏற்படும்போது வருமானக் கூற்றில் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. (02 புள்ளிகள்)

**1.11** ஒரு வியாபார நிறுவனம் அதன் தனித்தன்மை வாய்ந்த தேவைகளுக்கு ஏற்புடையதாக விருத்தி செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொதி ஒன்றினைப் பயன்படுத்துகின்றது. கம்பனி அதற்குச் சொந்தமான தகவல் தொழில்நுட்பப் பிரிவுகளை இவ்வாறு விருத்தி செய்வதற்கும் பேணுவதற்கும் கொண்டுள்ளது. இவ்வகையான கணக்கீட்டு மென்பொதி "தேவைக்கேற்ப விருத்தி செய்யப்பட்ட மென்பொருள்" (Tailor made accounting software) என அழைக்கப்படும்.
(02 புள்ளிகள்)

*வினாக்கள் **1.12** தொடக்கம் **1.18** வரையான வினாக்களுக்கு உங்கள் விடைகளை விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களைக் குறிப்பிட்டு எழுதவும்.*

**1.12** **பகுதி A** யில் தரப்பட்ட ஊடுசெயல்களை **பகுதி B** யில் தரப்பட்ட மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்க.

| | **பகுதி A – ஊடசெயல்** | **பகுதி B - மூல ஆவணம்** |
|---|---|---|
| (1) | கடன் அடிப்படையில் ரூ. 500,000/- க்கு இயந்திரம் கொள்வனவு செய்தல் | (a) பொருட்கள் பெற்றதற்கான பத்திரம் (GRN) |
| (2) | கொள்வனவுக் கட்டளை 100 பிரகாரம் கட்டளை இடப்பட்ட பொருட்கள் வியாபாரக் களஞ்சியத்தில் பெறப்பட்டது. | (b) பற்றுச்சீட்டு |
| (3) | ஒரு வாடிக்கையாளரிடமிருந்து ரூ. 50,000/- பெறப்பட்டது. | (c) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு |
| (4) | **APL** நிறுவனத்திற்கு கடன் அடிப்படையில் ரூ.250,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது. | (d) விற்பனைச் சிட்டை |

(04 புள்ளிகள்)

**1.13** பின்விபரிக்கப்படும் கணக்குகளை உண்மையான கணக்குகளா (Real Accounts), தனிநபர் கணக்குகளா (Personal Account) அல்லது பெயரளவிலான கணக்குகளா (Nominal Account) என்று **குறிப்பிடுக**.

(1) காணியும் கட்டடமும் கணக்கு

(2) சம்பளங்களும் கூலிகளும் கணக்கு

(3) கடன்பட்டோர் கணக்கு (03 புள்ளிகள்)

**1.14** பின்வரும் தோற்றப்பாட்டு (scenarios) ஒவ்வொன்றும் பிரயோகிக்கக்கூடிய பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

(1) தொக்கிருப்பு அதன் கிரயத்தில் அல்லது நிகர தேறுகைப் பெறுமதியில் எது குறைந்ததோ அப்பெறுமதியில் அளவீடு செய்தல்

(2) நிதிநிலைக் கூற்றில் அடங்கிய உருப்படிகளை நடைமுறை சாராத (Non-current) அல்லது நடைமுறையிலானவை என வகைப்படுத்துதல்

(02 புள்ளிகள்)

**1.15** பின்குறிப்பிடப்படும் ஒவ்வொரு ஊடுசெயல்களும் பதிவு செய்வதற்கு பிரயோகிக்கப்படும் பொருத்தமான முதன்மைப் பதிவேடு எதுவெனக் குறிப்பிடுக.

(1) காசுக்கு ரூ. 7,500/- பெறுமதியான மூலப்பொருள் கொள்வனவு

(2) **மெல்ஸ் நிறுவனத்திடம்** இருந்து கடன் அடிப்படையில் ரூ. 200,000/- க்கு இயந்திரம் கொள்வனவு

(3) 2015 யூன் மாதத்திற்கான தலைமை அலுவலக வாடகையாக காசுக் கொடுப்பனவு ரூ.25,000/-. (03 புள்ளிகள்)

**1.16** பின்வரும் செலவினங்கள் ஒவ்வொன்றையும் மூலதனச் செலவினமா, வருமானச் செலவினமா என வகைப்படுத்துக.

(1) கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க செலவான ரூ. 1,850,000/-.

(2) ஒரு பழைய இயந்திரத்திற்குப் பதிலீடாக ரூ. 400,000/- க்கு ஒரு புதிய இயந்திரம் கொள்வனவு. இது இயந்திரத்தின் உற்பத்தி இயலுமையை 5,000 அலகுகளால் அதிகரிக்கச் செய்தது.

(3) விநியோக மோட்டார் வாகனத்தின் சக்கர டயர்களை மாற்றி புதிதாகப் பொருத்த இறுக்கப்பட்ட ரூ. 60,000/-. (03 புள்ளிகள்)

**1.17** ஒரு கம்பனி சிறு செலவுக்காசு கட்டுத்தொகை (Petty cash float) ரூ. 15,000/- இனைப் பேணுகின்றது. மீள்நிரப்பல் மாதம் ஒரு முறை இடம்பெறும். 2015 மே மாதத்தில் பின்வரும் சிறு செலவு ஊடுசெயல்கள் இடம்பெற்றன.

| | **ரூ.** |
|---|---|
| குளிர்பானச் செலவு | 6,500 |
| எழுது சாதனங்கள் | 2,500 |
| விநியோகச் செலவு | 5,000 |

2015 யூன் மாத ஆரம்பத்தில் சிறு செலவுக் காசாளர் பெறக்கூடிய மீள்நிரப்புத் தொகை எவ்வளவு? (01 புள்ளி)

**1.18** பொதுத் தேவை நிதிக் கூற்றுக்களின் தரம் சார்ந்த சிறப்பம்சங்கள் **இரண்டினைக்** (02) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

*பகுதி A முடிவடைந்தது*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 32 புள்ளிகள்)

### வினா 02

**சனத்** என்பவர் 2015 சனவரி 01 இல் தனிநபர் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். முதல் இரண்டு வாரங்களில் இடம்பெற்ற ஊடுசெயல்கள் பின்வருமாறு.

| **திகதி** | **விபரம்** |
|---|---|
| 2015.01.01 | **சனத்** நடைமுறை வங்கிக் கணக்கொன்றில் ரூ. 950,000/- ஐ வைப்புச் செய்ததுடன் ரூ. 250,000/- பெறுமதியான பொருட்களை மீள விற்பனை செய்வதற்காக காசுக்கு கொள்வனவு செய்தார். |
| 2015.01.02 | வியாபார ஆரம்பச் செலவுகளாக ரூ.12,000/- காசாகச் செலுத்தப்பட்டது. |
| 2015.01.03 | மீள விற்பனை செய்வதற்காக ரூ. 350,000/- பெறுமதியான பொருட்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்தார். ஏற்றுக் கூலியாக ரூ. 10,000/- ஏற்பட்டது. |
| 2015.01.07 | இலாபம் 25% அடங்கியதாக காசு விற்பனை ரூ. 40,000/- க்கு இடம்பெற்றது. |
| 2015.01.10 | ஊழியர் சம்பளம் ரூ. 75,000/- செலுத்தப்பட்டது. இலாபம் ரூ.10,000/- உள்ளடக்கிய கடனடிப்படை விற்பனை ரூ. 100,000/- க்கு இடம்பெற்றது. |
| 2015.01.12 | **சனத்** தனது தனிப்பட்ட வாடகைச் செலவாக வியாபாரத்திலிருந்து ரூ.50,000/- செலுத்தினார். |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்தரப்பட்ட ஊடுசெயல்களினால் பின்கூறப்படும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படக்கூடிய தாக்கத்தினைப் (effects) **பதிவு செய்யவும்**.

(தொக்கு + வருமதியாளர் + காசு = மூலதனம் + பரிப்புகள் + (வருமானம் - செலவுகள்))

(08 புள்ளிகள்)

## வினா 03

**S & S அசோசியேற்** நிறுவனத்தின் கணக்குப் பதிவாளராக **ருவன்** என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியைத் தயாரித்துள்ளார். பரீட்சை மீதி வரவு மீதியாக ரூ. 6,000/- ஐக் கொண்ட தொங்கற் கணக்கு மீதியை உள்ளடக்கியுள்ளது. பின்னர் பின்வரும் தவறுகள் தெரியவந்தன.

(1) 2015 சனவரி மாதத்திற்கான வாடகைக் கொடுப்பனவான ரூ. 45,000/- காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டபோதும் வாடகைச் செலவுக் கணக்கில் ரூ. 54,000/- ஆக வரவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) **A.K. சில்வாவுக்கான** கடன் விற்பனையான ரூ. 55,000/- வருமதியாளர்கள் பேரேட்டில் **R.K சில்வாவின்** கணக்கில் தவறாக வரவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பேரேட்டில் இவ்வூடுசெயல் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) **ருகுணு என்ரபிரைசஸ்** இடமிருந்து ரூ. 47,500/- க்கு செய்யப்பட்ட கொள்வனவு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(4) வருமதியாளர்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூ. 25,000/- ஆல் குறைவாகக் கூறப்பட்டுள்ளது.

(5) பல்லின வருமானமான ரூ.5,000/- தவறுதலாக பல்லின செலவுக் கணக்கில் செலவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்கு வேண்டிய நாட்குறிப்புப் பதிவுகளைத் (Journal Entries) **தயாரித்தல்**

(b) தொங்கற் கணக்கினைத் **தயாரித்தல்** (08 புள்ளிகள்)

## வினா 04

**SP ரேடிங்** என்னும் வியாபார நிறுவனத்தை 2015 சனவரி 01 இல் **சுனில்** ஆரம்பித்து வைத்தார். வியாபாரத்தின் முதல் வாரத்திற்கான ஊடுசெயல்களின் விபரங்கள் பின்வருமாறு :

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 2015.01.01 | புதிய வியாபாரத்தைத் தாபிப்பதற்கு **சுனில்** மேற்கொண்ட முதலீடுகள் பின்வருமாறு :<br>• ரூ. 50,000/- வியாபாரப் பதிவுக்காகச் செலுத்தப்பட்டது.<br>• **சுனிலுக்கு** உரிமையான ரூ. 2,500,000/- பெறுமதியான பாரவூர்தி வியாபார விநியோகத் தேவைக்காக வழங்கப்பட்டது.<br>• **சுனில்** வியாபாரத்தின் பெயரில் வங்கிக் கணக்கொன்றினைத் திறந்து ரூ.2,000,000/- இனை வைப்புச் செய்தார். |
| 2015.01.02 | வங்கிக் கணக்கிலிருந்து ரூ. 175,000/- மீளப் பெறப்பட்டு 06 மாதத்தில் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூ. 150,000/- ஐயும் ரூ. 25,000/- மாத வாடகையாகவும் செலுத்தப்பட்டது. (காசோலை இல. 345543). |
| 2015.01.04 | மீள விற்பனைக்காக பொருட்கள் கொள்வனவு ரூ. 2,175,000/- (காசோலை இல. 345544). |
| 2015.01.05 | பணம் பெறும் காசோலை (Cash cheque) (காசோலை இல. 345545) வரைந்து ரூ. 175,000/- பணம் பெற்று வியாபார திறப்புவிழாச் செலவாக ரூ. 145,000/- செலவழிக்கப்பட்டது. மிகுதிப் பணம் சிறு செலவு (petty cash) முற்பணமாக மாற்றப்பட்டது. |
| 2015.01.06 | திறப்பு விழாவன்று காசு விற்பனையாக ரூ. 975,000/- பெறப்பட்டது. சேர்க்கப்பட்ட பணம் அதே நாளில் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) வியாபார நிறுவனத்தின் பேரேடுகளைத் **தயாரித்தல்**

(b) 2015 சனவரி 07 இல் பரீட்சை மீதியைத் தயாரித்தல் (08 புள்ளிகள்)

## வினா 05

***சீ சோன் (தனி) நிறுவனம்*** இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் கம்பனியாகும். கம்பனியானது தொழில்நுட்பத்தில் மேம்பட்ட இயந்திரமொன்றில் மேலதிக முதலீடு செய்து உற்பத்தி இயல்வலு மற்றும் தரத்தை மேம்படுத்தத் தீர்மானித்தது.

இயந்திரக் கொள்வனவு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு :

| திகதி | விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 2014.03.30 | இயந்திரத்தின் கொள்வனவு விலை<br>(மீளப் பெறக்கூடிய பெறுமதிசேர் வரியான ரூ. 120,000/- இனை இவ்விலை உள்ளடக்கியுள்ளது) | 1,120,000 |
| 2014.03.31 | இயந்திர காவுகைக் கிரயம் | 125,000 |
| 2014.03.31 | நிர்மாணம் மற்றும் ஏனைய நேர்ச் செலவுகள் | 125,000 |

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) இயந்திரம் 2014 ஏப்ரல் 01 இல் உற்பத்திக்குத் தயாராகவுள்ளது.

(2) இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலம் 10 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(3) 10 வருட முடிவில் இயந்திரத்தின் விற்பனை விலை ரூ. 275,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ள துடன் அந்த விற்பனைக்கான கிரயமாக ரூ. 25,000/- செலவு ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படு கின்றது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) இயந்திரத்தின் மூலதனப்படுத்த வேண்டிய மொத்தக் கிரயத்தினைக் **கணிக்கவும்**.

(b) 2014 ஏப்ரல் 01 இல் அன்று இயந்திரத்தின் தேய்மானப் பெறுமதியைக் (depreciable value) **கணித்தல்**

(c) இயந்திரத்தின் ஆண்டுத் தேய்மானத்தை நேர்கோட்டு முறை அடிப்படையில் **கணித்தல்**

(d) 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் பொதுப் பேரேட்டுக் கணக்கு களைத் **தயாரித்தல்**

(i) இயந்திரக் கணக்கு

(ii) தேய்மானச் செலவுக் கணக்கு

(iii) தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு

(e) 2015 மார்ச் 31 இல் இயந்திரத்தின் தேய்மானப் பெறுமதியினைக் (depreciable value) **கணித்தல்**

(08 புள்ளிகள்)

*பகுதி B முடிவுற்றது*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 28 புள்ளிகள்)

### வினா 06

**சொப்ற் ரோய்ஸ் என்ரபிரைசஸ்** நிறுவனத்தின் 2015 மார்ச் 31 இல் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது. **சொப்ற் ரோய்ஸ் என்ரபிரைசஸ்** நிறுவனம் **லசந்த** என்பவருக்கு உரிமையான ஒரு தனியுரிமையாளர் நிறுவனம் :

**பரீட்சை மீதி – 2015 மார்ச் 31 இல்** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் | 50,000 | |
| திரண்ட தேய்மானம் | | 11,500 |
| 10% நிலையான வைப்பு | 10,000 | |
| வியாபார வருமதிகள் | 15,622 | |
| ஐயக்கடன் ஏற்பாடு – 2014 ஏப்ரல் 01 இல் | | 3,300 |
| வியாபார சென்மதிகள் | | 4,200 |
| செலவின முற்கொடுப்பனவுகள் | 1,000 | |
| அட்டுறு செலவுகள் | | 5,000 |
| காசுக் கையிருப்பு | 1,035 | |
| வங்கிக் காசு | | 1,330 |
| மூலதனம் - 2014 ஏப்ரல் 01 இல் | | 34,000 |
| எடுப்பனவுகள் | 540 | |
| விற்பனைத் திரும்பல் | 15,060 | |
| கொள்முதல் திரும்பல் | | 9,600 |
| அனுமதித்த கழிவுகள் | 200 | |
| விற்பனை | | 174,630 |
| கொள்முதல் | 105,625 | |
| தொக்கு – 2014 ஏப்ரல் 01 இல் | 9,975 | |
| ஏனைய வருமானம் | | 120 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 14,514 | |
| நிர்வாகச் செலவுகள் | 16,700 | |
| நிதிச் செலவுகள் | 3,409 | |
| | **243,680** | **243,680** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

(1) 2015 மார்ச் 31 இல் தொக்கிருப்பின் கிரயம் ரூ. 20,000,000/-, மேலும் அதன் நிகர தேறுகைப் பெறுமதி ரூ. 26,000,000/- ஆகும்.

(2) நிலையான வைப்பின் மீதான வருடத்திற்கான வட்டி 2015 மார்ச் 31 இல் கிடைக்கப் பெறவில்லை. அது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவுமில்லை.

(3) 2015 மார்ச் 31 இல் ஐயக்கடன் ஏற்பாடு மீள மதிப்பிடப்பட்டு ரூ. 3,700,000/- ஆக அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது.

(4) அடுத்த வருட வாடகையாக செலுத்தப்பட்ட ரூ. 1,230,000/- நிர்வாகச் செலவின்கீழ் பதிவு செய்யப்பட்டது.

**நீங்கள் பின்வருவனவற்றைத் தயாரிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.**

(a) 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான முற்றடக்க (Comprehensive) வருமானக் கூற்று

(b) 2015 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று (14 புள்ளிகள்)

## வினா 07

**றோட் ரைடர்ஸ்** என்ற காலணி தயாரிக்கும் சிறிய கம்பனியின் 2014 யூன் 30 இல் முடிவடைந்த முதற் காலாண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு :

(1) 2014 ஏப்ரல் 01 இல் மற்றும் 2014 யூன் 30 இல் இருப்பிலிருந்த தொக்கு விபரங்கள் :

| தொக்கு வகை | 2014 ஏப்ரல் 01 இல் அன்று (ரூ.) | 2014 யூன் 30 இல் அன்று (ரூ.) |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | 75,000 | 35,000 |
| புத்துருவாகும் உற்பத்தி | 12,600 | 17,000 |
| விற்பனைக்காகக் கையிலிருக்கும் பூர்த்தியான பொருட்கள் | 74,000 | 50,000 |
| **மொத்தம்** | **161,600** | **102,000** |

(2) முதற் காலாண்டிற்கான மூலப்பொருட் கொள்வனவு - ரூ. 1,256,000/-

(3) சம்பளம், கூலி மற்றும் தொடர்புபட்ட செலவுகள் :

- தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் - மாதமொன்றுக்கு ரூ. 65,000/-
- ஏனைய உற்பத்தி ஊழியர்களின் மொத்தச் சம்பளம் - மாதமொன்றுக்கு ரூ. 44,000/-
- நேர்கூலியானது உற்பத்தி செய்த காலணிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படும். முதற் காலாண்டில் மொத்தம் 1,250 சோடிக் காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டது.
- செலுத்தப்படும் நேர்கூலியானது ஊழியரின் வகை அடிப்படையில் மாற்றமடையும். ஊழியர் வகை மற்றும் கொடுப்பனவுக் கூலி விகிதம் ஆகிய விபரங்கள் கீழ்வருமாறு :

| ஊழியர் வகை | ஒரு சோடி காலணி உற்பத்திக்கு வழங்கப்படும் கூலி விகிதம் (ரூ.) |
|---|---|
| இயந்திர இயக்குநர் | 95 |
| உதவியாளர்கள் | 20 |

(4) இயந்திரம் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடம் ஆகியனவற்றின் தேய்மானம் ஒரு காலாண்டிற்கு முறையே ரூ. 5,000/- மற்றும் ரூ. 8,000/- ஆகும்.

(5) முதல் காலாண்டில் இடம்பெற்ற ஏனைய செலவுகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **ரூ.** |
|---|---|
| தொழிற்சாலை மின்சாரம் | 120,000 |
| நேர் செலவுகள் | 56,000 |
| தொழிற்சாலைப் பராமரிப்பு | 27,000 |
| நேரில் பொருட்கள் | 9,000 |

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் (at prime cost) மதிப்பீடு செய்யப்படும்.

(2) ரூ.13,000/- பெறுமதியான மூலப்பொருள் களஞ்சியப்படுத்தலின் தவறினால் பாதிக்கப்பட்டுள்ளது.

(3) தொழிற்சாலைக் கட்டிடத்தில் 25% **றோட் ரைடர்ஸ்** விற்பனை நிலையத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைப் பகுதிக்கு விற்பனை விலையில் 25% மிகை விலையில் (mark up) மாற்றப்படுகின்றது.

**நீங்கள் செய்ய வேண்டியது**

**(a)** **றோட் ரைடர்ஸ்** நிறுவனத்தின் 2014 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டுக்கான உற்பத்திக் கணக்கினைத் **தயாரித்தல்**

(b) விற்பனைப் பிரிவுக்கு பொருட்கள் மாற்றப்படும் பெறுமதியினைக் **கணித்தல்**.

(14 புள்ளிகள்)

*பகுதி C முடிவுற்றது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |